# பத்ரி உரையாடல்/ தை வருடப் பிறப்பு/ ஜனவரி,2010 இதழ் 3





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# பத்ரி

உரையாடல்!

தை வருடப் பிறப்பு!

ஜனவரி, 2010

இதழ் 3

## பொருளடக்கம்


1. ஸ்வய ஞானாநுபவ நூல் பற்றிய விளக்கம்----------------------101

௨. எல்லாம் நீ, எல்லாம் ஒன்றே, எல்லாம் நீயே குருதேவா -
விளக்கம்--------------------------------------------------------1௩௪

௩. நிதாகன் அனுபவம்-----------------------------------------------151


எல்லாம் நீ!



உ

அந்த சிவரகஸ்யம், (101)
செயலற்ற ஒன்று
என சொல்லும் காரணம்
அது நாம ரூப குணம் குறை
கடந்த நிலைக்கு செல்ல
கை காட்டியாகும்.
அது வழிகாட்டியுமல்ல.
அது நாள் காட்டியுமல்ல. கைகாட்டி என்
பது செயல்படாத ஒன்றாகும். அதன் வழி

ஓர் அன்பர் கேட்டதாவது :- அருமை பாபாஜீ, ஸ்ரீமத்ரியுகீதை, என்னும் உம்முடைய,

**ஸ்வய ஞானநுபவ நூலின்,**

பாடல் தொகுப்புகள் (அம்மைத்தியம் இடைமானித்து)

வைத்தியம் :- ஓம் அருமை மஹாத்மா ஜீ, மன்னிக்கவும், அப்பாடல்கள், இந்த ஏழையினுடையதல்ல. அவை, சிவரகஸ்யம் ஆகும். அவையெல்லாம்,


## ஆதிரைத் குருவின்/ உடையதாகும்

அப்பாடல்களுக்கு, எம் ஸ்ரீரிய மஹாத்மாவும், காரணம் ஆகமாட்டார். எந்த ஸ்ரீமஹாத்மாவும், காரணம் ஆகமாட்டார்கள். எல்லோரும், ஓர் கருவியே ஆவர். அவர் ஒருவரே, காரணம் ஆவர். இதுவைத்தியம்:

அம்மஹாத்மா :- ஓம் அறிவான பாபாஜீ, இந்த அடியேனை, மன்னிக்கவும். இதில் இவ்வளவு பணிவும், பெருமையும், இருப்பதை அறியாது,



ஸ்ரீ [illegible] / அவர்க்கு [illegible] [illegible]




நடந்தால் அது
காட்டும் நிர் (102)
குண பிரம்மத்தை
அடையவரம் என
அறிக. வழிகாட்டி
என்றால் நிர்க்குண
பிரம்மத்தைப் பற்றி
போதிப்பதாகும் அது
சத்குரு நியாயமும். நான் காட்டி என்பது
ஸ்ரீபகவான் நியாயமும். அவன் காலத்தை
காட்டி

சொன்னமைக்கு, மன்னிக்கவும். இனிமேல் கேள்வியை தொடரலாமா?

**வைத்தியம்:-** (பவமாகவே சிரித்து விட்டு) மன்னிப்பு கேட்கும் நிலைக்கும், மன்னிப்பு கொடுக்கும் நிலைக்கும், காரியம் ஒன்றும் நடைபெறவில்லை.

**ஸ்ரீமஹாத்மா:-** என்ன இருந்தாலும் பரமாத்மா, ரகசியத்தை, தற்காலிகமாக, வந்து போகும் மஹாத்மாக்களுடையது என, சொல்வது பொருந்தாதுதானே?

**வைத்தியம்:-** அதை அப்படியும் எண்ணி, சொல்லி விடக்கூடாது மஹாத்மா, அந்த ரகஸ்யமும், செயலற்ற ஒன்றுதானே? அதுவே தன்னைத்தானே, விளக்கிக் கொண்ட நிமித்தம், அதுவே ஸ்ரீமஹாத்மாக்களாக ஆனது. என்றும் கொள்ளலாமே? ஆனால் அதை வாக்குவடிவிலும், வரிவடிவிலும், மெய் உணர்வோடு தேடும், மெய்யன்பர்களுக்கு, ரகஸ்யத்தை, வெளிப்படுத்தியது, ஸ்ரீமஹாத்மாக்கள்தானே?



துரிதப் படுத்து
பவனாகும்.
அதாவது ஸத்திய
தர்மத்தை மட்டுமே
போதித்து பதமுக்தி
க்கும், இதன்வழி சென்று
பரமுக்தியையும் அடை
யவாம் என, அதி அதி
ரகஸ்யமாக சொல்பவனாகும். ஆகையே இங்கு
கைகாட்டி:- உடன் வராது. நாம் செல்லும்
நமக்கு இது தான் வழி என அறிவு
றுத்தும்.

ஷிவரகஸ்யத்தை உணர்ந்த, ஸ்ரீமஹாத்மாகள்!
கருவிகள் ஆவர். அதுவே காரணம் ஆகும்.
சரி சரி, நாங்கள் கேள்வி என்ன மஹாத்மா?
ஸ்ரீமஹாத்மா:- அந்த ஷிவரகஸ்யம் என்ற நூல்! (வெளி)
இப்பாரதபூமியிலோ! அல்லது மற்றும் நாடுகளிலோ!
அடவிகளில் (குகைகளில்) வாழும் தபஸ்விகளிடமோ!
அனுஷ்டிக்கப் படுகிறதா? நாங்கள் போன்று,
சாதகர்கள்! ஷிவமாக பாராயணம் செய்யப்படுகிறதா?
ஆனால் யாம் கண்டறிந்தியில், சில இடங்களில்
அதிரகஸ்யமாக, பாதுகாக்கப் பட்டு, அதற்கென
உரிய, பக்குவ ஆன்மாக்களுக்கு மட்டுமே! சிவசிவ
மஹான்கள்! போதிக்கிறார்கள் என்பதையும்,
யாம் அறிவோம். ஆனால் அது நாங்களாம் போலன்று,
மேலும் அதன் புதிய பதிப்பு என்ற நிலையில்
ஸ்ரீரமணாஸ்ரமத்தில் மட்டுமே கிடைக்கிறது.
வேறு எவரும், அப்புஸ்தகம் போட முன்வரவில்லை.
மேலும் ஓர் ரகஸ்யம் என்பதையும் அறிவோம்.
என்ன வென்றால்? அப்புத்தகத்தை! எவரும்
திரும்ப புதிப்பில்லை. (அது ஆதிநூல் என்பதால் தான்)




சிவரகஸ்யம் என்ற (104)
நூல் செயவற்ற
நிலையில் அனுபவம்
கூட்டுவதற்கு,
பர கருணையும்!
இறை கருணையும்!!
இணைந்தாலன்றி ஸ்வய அனுபவம் கூடாது.
இது ஸத்தியம்.

அத்வைத
மற்றும் ஸ்ரீமத் பகவத்பாதாள்ஸ்ரீ ஆதி சங்கரருடைய,
வேதாந்த நூல்களையும்! உபநிஷதம்! மற்றும்
கைவல்ய நவநீதம்! வாசிஷ்டம்! போன்ற
நூல்கள்! பாடம் நடைபெறுவதையும் யாம்
அறிவோம். ஆனாலும் அவைகள் எல்லாம்,

**பாடம்** | சிறப்பாக நடைபெறுகிறது.
**அனுபவநிலை** | எங்கும், எவரிடமும் இல்லை.

காரணம் :- காம & காஞ்சனம்! மோகமாசையும்;
நாம ரூப, ஜக ஜீவ, உறவு சுற்ற மயக்கமும்;
மின்னாமல் மினுக்கிக்கொண்டிருக்கிறது, என்பதையும் அறிவோம்.
படிப்பு! பட்டம்! பதவி! அந்தஸ்து!
கௌரவம்! இவைகளை துறக்க எவரும் தயாராகவில்லை.
மேலே கூறிய இவைகளை விட்டால் நம் நிலை என்ன?
என்ன ஆவோம்? (ஒன்றும் பயனும்) அட்ரஸே இல்லாமல் ஆகிவிடுவோமே? என அஞ்சுகின்றனர்.
(தன் வாழ்வையும்! நிலையையும்! விடவருவதற்கு யாருமில்லை)
அட்ரஸே இல்லாமல் போனால், நம்மை எவர்
மதிப்பர்? அவரும் நம்மை மதிப்பரோ? என மனமைய
கலக்கமுற்று! அடைகின்றனர் என்பதையும் அறிவோம்.




பரகருணை என்றால்? (105)
யோகமாயாவை!
தம்முள் அடங்கிய
நிலையால் உள்ள,
ஸ்ரீ ஸத்குரு கிருபை!
பரிபூரணமாக இருக்க
வேண்டும். அது அவர்
வாக்கிய சிறத்தை யிலும்
நூல் சிரத்தா தேவை யிருந்தும் கிடைக்கும் என்பது
ஸத்தியமே.


ஸ்ரீமஹாத்மா:- இதில், எம் கேள்வி என்ன வென்றால்?
இந்த சிவரகஸ்யத்தை! ஸ்ரீமத் ரிபு கீதை! என்றே
அழைத்த, அனுமதி தாருங்கள் என கூறலில்,
அனுமதி பெற்று, பின் வினாக்களை எழுப்பினார்.

(1) இந்த ரிபு கீதை! என்ற வேதாந்த நூலை மட்டும்!
அதை உணர்ந்த ஞானிகள்! அதி ரகஸ்யமாக
பாது காப்பது ஏன்?

(2) மற்றும் அனைத்து வேதாந்த நூல்களுக்கும்,
இந்த ரிபு கீதைக்கும் உள்ள ஒற்றுமை என்ன?
வேற்றுமை என்ன?

(3) மற்றும் வேதாந்த நூல்கள் ஜீவன் முக்தியை
கொடுக்குமா? அல்லது அவைகள் அனைத்தும்
வாய்ப்பாடம் தானா?

காரணம்:- இன்றைய அநேக வேதாந்த குருமார்களின்
வாசகம் யாது எனில்:- வேத வேதாந்த சாஸ்திரங்
களை பூர்வ விளக்கங்களுடன் நன்கு படி! என்றும்,
நீ படித்தவைகளை மற்றவர்களுக்கு போதிப்பாயாக
(நீ சாதிக்காதே என்பது உள்
அடங்கிய கருத்தாக இருக்கிறது) என்றும் கூறுகிறார்கள்.



இறை கருணை என்னும் (106)
நாம ரூபமுள்ள
ஓர் ஸ்ரீ பகவானிடம்!
ஸ்ரீ ஸத்குரு அருளும்
நிலையில், சிதையாத
சர்வார்ப்பணம்!
உறுதியாக இருந்தால்,
ஸ்ரீ பகவானின் மாயாவும்! அதன் மனமும்!
கரைந்து செயலிழந்து, ஜீவன் முக்திக்கு வழி
வகுக்கும்.


(4) இந்த ஸ்ரீ கீதையை, உம் போன்று, எவரேனும்,
பொறுக்கி எடுத்து, எழுதி, பாராயணமும்!
உபதேசமும்! செய்கிறார்களா?

(5) அல்லது, முழு ஸ்ரீ கீதையையும் (18 அத்யாயங்களையும்),
அவரவர் ஏற்ற நிலையில், நித்திய பாராயணம்!
குறிப்பிட்ட காலங்களில், தனிமையிலோ!
அல்லது அன்பர்களுடனோ! செய்கிறார்களா?

(6) மேலே உள்ள, ஐந்தாவது கேள்வியின் நிலையில்,
வேறு வெளி நாடுகளில், எங்கேனும், அவரவர்
மொழிகளில், நித்திய பாராயணம் செய்கிறார்களா?

(7) இந்த ஸ்ரீமத் கீதையின், (சில ரகஸ்யத்தின்)
கருத்தால், தாங்கள் உணர்ந்தது என்ன?
எங்களுக்கு உணர்த்துவது என்ன?

எங்கள் அருமை பாபாவே! இந்த ஏழு கேள்வி
களுக்கும், எளிய முறையாயும்! சுருக்கமாகவும்!
பதில் தர, உங்கள் பாதம் பணிந்து வேண்டுகிறோம்.




வைத்தியம்:- ஓம் பரமபுருஷனே! இப்போது நாங்கள் கேட்ட, கேள்விகள் எல்லாம், தாங்களுடையதா? மற்றும் முக்திய அன்பர்களின்! இணைத்கமே! கேள்வியாக வந்ததா?

ஸ்ரீமஹாத்மா:- இதை எப்படி பாபா! தாங்கள் தெரிந்து கொண்டீர்கள்?

வைத்தியம்:- இது ஓர் புதுமையே. ஆனால் அவன் அனைவரிலும், அந்தர்யாமி என்ற இதயவாசி ஆகும். ஆகவே, அவன் இல்லாத இடம் இல்லை. அறியாத பொருள் இல்லை. ஆகவே, இக்கேள்வியை கேட்டவனும் அவனே.

ஸ்ரீமஹாத்மா:- உண்மைதான் பாபாஜீ! இங்கு இந்த ஹிமாலயா வாசிகளில், பக்குவ ஆத்மாக்கள் பல பல நிலையில், உள்ள அன்பர்கள் உண்டு. ஆனால் அனைவருமே! தாங்களுடைய மடல் அனைத்தும், வாசிப்பவர்களாகவும். மேலும் தாங்களுடைய, ஸ்வய ஞானநுபவ நூலையும்,




படிப்பவர்கள்:- (108)
அனைத்து மடல்
களையும் சிரத்தையுடன்
படிப்பவர்களாகவும்.
படித்தவர்கள் என்றால்:-
தான் படித்ததை பல
இடங்களில், ஸத்ஸங்க
ஸேவையாக, பகிர்ந்துரை செய்பவர்களாகவும்.

தெளிவுரை! விளக்கவுரை! கருத்துரை!
மற்றும் ரகஸ்யம்! படிப்பவர்களாயும்!
படித்தவர்களாயும்! படிப்பிக்கிறவர்களாயும்!
**ஸ்வய அநுபவம்!** பெறும் நிலையில்,
துடிப்பு! ஏக்கம்! உருக்கம்! கண்ணீர்பெருக்கம்!
உள்ளவர்களாயும், இருப்பதால், அடிக்கடி,
இங்கு கூடும் (ஒவ்வொரு இடங்களிலும்)
ஸத்ஸங்கங்களில், கலந்து பலபல விளக்கம்
பெறுபவர்களாகவும், இருப்பதால் இந்த
கேள்விகள் (அன்பர்கள் & எம்முடையதுமாய்!)
அமைந்தது பாபாஜீ!

வைத்தியம்:- ஒரு கேள்வி கேட்கிறேன். இங்கு
உள்ள அன்பர்களின், ஆர்வமும் & அகன்
அநுபவமும், எந்நிலையிலுள்ளதுமென்றோ?

ஸ்ரீமஹராஜ்மா:- இதை எதை, அடிப்படையாக வைத்து
இந்த கேள்வி, கேட்கிறீர்கள் பாபா? யுக்தியையா?
மற்றும் வேதாந்த நூல்களா?




படிப்பிக்கிறவர்கள்: (109)
இவர்கள் குரு ஸ்தானத்தில் இருப்பவர்களாயும், பல வேதாந்த பாடக் கருத்துக்களை சொல்லி, இதன் நுட்பத்தையும், விளக்குபவர்களாயும், ஸ்வய ஞானானுபவ நூலுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாயும் அமைந்தவர்களாவர்.

வைத்தியம்:- இந்த நூலை, வேறு எதையும், ஆதாரமாக வைத்து, இக்கேள்வியை கேட்கவில்லை. சிவ ரகஸ்யமான, ஸ்வய ஞானானுபவ நூலின், சிறப்பையுடன் ஒத்தும், மெய்யன்பர்கள், வேறு வேதாந்த நூலையும், இன்னும் செலுத்துகிறார்களா? அல்லது இந்த ஒன்றை மட்டும், ஏற்றுக் கொள்கிறார்களா? என்று தான் அறிவாறு கேட்டோம்?

ஸ்ரீமஹாத்மா:- அன்பான எம்பாமாஜீ! ஓர் உண்மை என்னவென்றால், இந்த நூல், ஒன்றை தொட்ட எந்த அன்பர்களும், வேறு எந்த நூலையும், தொட இயலவில்லை, யென்பதே ஸத்தியம். ஓ அன்பான பாமா, மற்றும் ஓர் முக்கியமான கேள்வி, இங்கு அனைவரிடமும் தோன்றியுள்ளது. அதையும் இப்போதே கேட்கவாமா? அல்லது, அப்புறங்களில், கேட்டு முடிந்தவுடன், அக்கேள்வியை கேட்கலாமா?

வைத்தியம்:- ஓ மஹாத்மாஜீ! சுண்டைக்காயில் இரண்டு நெடியா? முன் கேள்விகளோடு, இதையும், இணைத்துவிடுங்கள். கேள்வி தொடரட்டும்.




ஸ்வய ஞானானுபவம்!
பெற்றவர் யார்? (110)
என்றால்? நான்! எனது
இறந்தவனையும்!
வியாபாரம்! விளம்பரம்!
ஆடம்பரம் இல்லாததனையும்! மௌனமையும்
பணிவு என்ற அடக்கம் உடையவனையும்!


ஸ்ரீமஹாத்மா:- அக் கேள்வி யாது எனில்?

கேள்வி:- (8) ஸ்வய அனுபவ ஞானத்தில்!
(ஸ்வய ஞானானுபவ நூலில்) 6-வது பாடலில்!
தானியம் கிடைத்தவுடன், பதர்களை தூர எறிவது
போல்; வேதமறு உணர் பொருளை, உணர்ந்த பின்னர்.
இங்குற்ற, நூலையெல்லாம், எறிதல் வேண்டும்.
வாதகமாம், நூலையெல்லாம், எறிந்த பின்னர்;
வருந்தியுமே, அநவரதமும் இடைவிடாமல்;
யோகமுற! சாதகமாய் நிதித்தியாசத்தை;
அரியுடனே ஆரணமாய் பழகல் வேண்டும்.
என்ற பாடலில், அன்பர்கள் கேள்வி என்னவென்றால்?
வேதமறு உணர் என்கிறார். அவ்வாறு உணர்ந்த பின்
இவ்வுள்ள நூலையெல்லாம் எறிந்து விடு! எனவும்
ஆணையிடுகிறார். பின்னர், வாதகமாம் நூலையெல்
லாம்! எறிந்த பின்னர், வருந்திய நிலையால்
(வருந்திய நிலையில்) அநவரதம் இடைவிடாமல்,
யோகம் பெற, நிதித்தியாசம்! செய் என்கிறார்.

ஸ்வய ஞானாநுபவ நூல் பற்றிய விளக்கம்




இதில் எங்கள் அனைவரின், கருத்து யாது
எனில் :- பேதம் அற்றால் விருப்பு வெறுப்புகள்
இல்லை. விருப்பு வெறுப்பு! ஏற்பட்டால், குற்றம்
குறைகள் (சங்கல்ப விகல்பங்கள்) நாசமாகி,
இந்நிலையால், ஒருவனுக்கு, நிறைவு! மனம்! விளம்!
நிதித்தியாசம்! தேவை இல்லை என்பது சத்தியமே.
இந்நிலை பெற்றவன் எவரும்?
நிதித்தியாசம் தேவையா? அல்லவது?
உண்டவன் தூங்குவானே தவிர?
இரை தேடமாட்டான்! திரும்பவும் உண்ணவும் மாட்டான்!
இரையும் தேவையில்லை. உண்ணவும் தேவையில்லை
இதற்கு, எடுத்துக்காட்டாக, குழந்தையை மாடலால்:-
தெளிவொன்று, நூல் வழியால் அறிந்த பின்னர்,
தெளிவித்த நூல் மொழியை மீண்டும் மீண்டும்!
சொன்னால் வாக்குக்கும் அக்கம்தானே? இது
அனுபவ ஸ்ரீ ஞானிகள் வாக்காகும். இப்படி
இருக்க நித்தியபாராயணம் தேவையா?
அது சம்பந்தப்பட்டவர்க்கும் தேவையா? அதுவே கேள்வி
அல்லவா?



ஒரு நாள்! உனக்கு அனுபவம் கொடுக்கும் (112)

கை காட்டி ஆகும்.
அதற்கு உபகாரமாக
இருந்த நூல்கள் எல்லாம்
வழிகாட்டிகள் ஆகும் என, உணர்வாயாக.

தானியம் கிடைத்தவுடன், பதர்களை தூர எறி என்றும் :-

பல நூல்பயில்! ஆனால் ஒன்றில் நில்
பெற்று நின்று விடு.

நீ நிலைத்து நிற்கும் நூலே மணி ஆகும்.
மற்றும் அதன், வழிகாட்டிகள் எல்லாம், பதர் ஆகும்.
அதாவது வழிகாட்டி நூல்கள் எல்லாம் சிப்பி ஆகும்.
உனக்கு சுய அனுபவத்தை கொடுத்து, உன்னை
கண்டாய்! ஆக்கிய நூல் முத்து ஆகும்.

மேலும் ஓர் உண்மை என்னவென்றால்?
மேலும் மேலும் வழிகாட்டிகளாகிய, நூல்களையும்
படித்துக் கொண்டே வந்தால்?????????

(1) காலம் விரயம் ஆகும்.
(2) சந்தேகம் குழப்பம் உண்டாகும்.
(3) பாடம் படிப்பு பட்டம் பதவி பெறலாம்.
(4) உலகம் புகழ் ஓர் வித்வான் ஆகலாம்.

ஸ்வய ஞானாநுபவ நூல் பற்றிய விளக்கம்



கைகாட்டியே (11ஓ)

ஜீவன் முக்தி ஆகும்.

கைகாட்டி உன் உடன்
வராது. அது காட்டும்
திசையில் நீதான் நடந்து
செல்ல வேண்டும். நீ நடந்தால் தான் வீடு
தொடியும். இதில் சந்தேக கலக்கமயம் வேண்டாம்.

(5) நீ வந்த காரியத்தை மறந்து விடுவாய்.

(6) தன்னை அறியும் அறிவை இழக்க நேரிடும்.

(7) ஸ்வய அனுபவ ஞானம் பெற முடியாது.

(8) போதிப்பவன் | சாதிப்பவன் !

(பேசுபவன் உண்ண முடியாது உண்பவன் பேசமாட்டான்) ஆவாய். | ஆக முடியாது.

(9) வித்வத்வ அதிகாரம் ! அஹங்காரம் ! மேலோங்கும்.

(10) இவைகளால் ஜீவன்முக்தி | அல்லவே இல்லை.

பலபல நூல்களை பார்ப்பதனாலும் ! யோகிப்பதனாலும் ! படிப்பதனாலும் !

கூட்டம் கூடும் ! ஜே ஜே | என கொண்டாடுவர்.


அக் கொண்டாட்டமே உனக்கு குழி பறிக்கும்.


பணமும் / புகழும் ! பிறவர்க்கு நகையால் உன்னை மேலே மேலே
தூக்கிச் செல்லும். அதனால் உ ண் டா கு ம்.

கர்வம் ! உன்னை படுபாதாளத்தில் தள்ளி

மு ........ டி ........ வி ........ டு ........ ம்

ஜா த் உ ஷ்டம்





பணம்! பதவி! கௌரவம்! அந்தஸ்து! என்ற நிலையில், பிரவர்த்தி! உன் கண்ணை, மூடி விடும். (114)

நிவர்த்தி மார்க்கம் மறைந்து விடும்.


வழி குறைந்து குறைந்து, தவனம் தேவை.

அதனைத் தான் **பாதகமான** நிலைத் தன்று என்றார்.

(சாதகமான நிலைதான் வேண்டாம்)

1. தூங்காமல் தூங்கும் நிலை பெறும் வரை, அப்பியாசம் பாவனை செய்.
2. நிலைமருவாத அலைமனது, மெள்ள மெள்ள, லய ஞானானுபவம் பெறும் வரையிலும், "
3. கூறுபடும் பேதம் எல்லாம் அழியும் வரை, "
4. நொடியாத துவைத வடிவம் அழியும் வரை, "
5. மனம் மாய்ந்து, மனம் மறக்கும் வரை, "
6. சஞ்சலமான குற்றம் குறை, நீங்கும் வரை, "
7. நாம ரூப மோஹமெல்லாம் ஒழியும் வரை, "
8. குத்துக்கல் & பட்டமரம், என ஆகும் வரை, "
9. சொல்லும் / பொருளும் / நாசமாகும் வரை, "
   (நாமம்) (ரூபம்)
10. நாமரூப, ஜக ஜீவ, உறவு சுற்றம், நாசமாகவே ஆகவேதான்? வரை, "

பாதகமாம் நிலையெல்லாம் தெரிந்த பின்னர்,
வருந்தியுமே அனவரதம் இடைவிடாமல்,
போதமுற சாதகமாய் நிதித்தியாசத்தை,
சாதிக்கடியும் வரை புரியுடனே பூரணமாய் பழக வேண்டும் என்றார்.
(பாராயணம் வேண்டும்) "



ஆஸ்திகம் :- (115)
தெய்வ நம்பிக்கை
யில் விளையும் அமைதி
ஆனந்தம் ஆகும்.
நாஸ்திகம் :-
தெய்வ நம்பிக்கை
இல்லாமல் தம் உழை
ப்பில் (அஹங்காரம்!
ஆதிக்க! அதிகார! வெறி

(1) யால் நாமரூப உலகை, உண்மையென நம்புதல்
நாஸ்திகம் ஆகும்.

வைத்தியம் :- கேள்வி :- இந்த ரிபுகீதை என்ற
வேதாந்த நூல் மட்டும், அதை உணர்ந்த ஞானிகள்,
அதிரகஸ்யமாக பாது காப்பது ஏன்?
பதில் :- மற்றும் அனைத்து வேதாந்த நூல்களிலும்,
நாமரூப, ஜக ஜீவ, ஈஸ்வராதிகளுக்கும், மற்றும்
இறை நாமா & மந்திரங்களுக்கும்! அறுப்
பிரமாணமாக! இடம் கொடுத்து, பின் அவைகள்
இல்லையென, வலியுறுத்தும்.
ஆனால் இந்த சிவரகஸ்யம்! என்ற ஆதி நூலாகிய,
ஸ்ரீமத் ரிபுகீதை என்ற, ஸ்வய ஞானநுபவ நூலோ!
ஆதியிலிருந்தே, நாமரூப, ஜகஜீவ, தோற்றங்களையும்,
எல்லா மந்திரங்களையும்! அனைத்து உபாசனைகளையும்,
தேவ தெய்வ திரிகர்த்தாக்களையும்!
இல்லை இல்லை இல்லவே இல்லை! இல்லை இல்லை இல்லவே இல்லை!
யென வலியுறுத்திக் கூறுவதோடு எளிய! இனி
உரிய! உயரிய! சுப! சுய!



ஸ்ரீமத் ரிபு கீதையை (116)
பக்தி! நான்,
அனுபவம்! இல்லாமல்
படித்தால்:- தேவ தெய்
வங்களும்! ஜக ஜீவ
தோற்றங்களும்! பஞ்ச
பர ஜோதிகளும் மற்றும்
அனைத்து நாம ரூபங்களும்
இல்லை! இல்லை! எனப் படித்தவுடன் வரும் நிலை?

அரிய! பெரிய! கருத்துக்களையும்! படிக்கும் போதே! உணரவும்! உணர்த்தவும்! இருப்பதால், இதை ஸ்வயமாக, உணரும் ஞானிகள்! மனைவம் இல்லாதவர்களுக்கு, போதித்தால் ஆஸ்திகம் கெட்டு! நாஸ்திகம் ஆகிவிடக் கூடாதே. என்று, நல்ல எண்ணத்தாலும், வழி முறையாக, வந்தவர்களுக்கே, இது உரியபலன் தரும் என்பதனாலும், மறை பொருளாக! வைத்திருக்கிறார்கள் என்பதே ஸத்தியமாகும்.

**2 கேள்வி:-** மற்றும் அனைத்து வேதாந்த நூல்களுக்கும்! ரிபு கீதைக்கும்! உள்ள ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன?

**பதில்:-** ஒற்றுமை:- ஜீவன் முக்தியின் நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்களும், உபாதிகளும்! இல்லை இல்லை! என கூறுகின்ற அத்வைத நூல்களாகும் ஒற்றுமை

வேற்றுமை:- இந்த ரிபு கீதை ஒன்றே! எளிமை இனிமை வேறு எந்த அலங்காரமும் சுலபமாக அமைந்ததாய்,



நான்தான் தெய்வம்.
" " எல்லாம்
எனக்கு அயலாக
எதுவும் இல்லை என்ற
நிலையில் அகங்காரம்
அதிகாரம்! ஆதிக்கம்!
பெருகிய நிலையில் தெய்வ
நம்பிக்கை இழந்து பணிய
ஒழுக்கம் கெட்டுவிடும் என அறிக.

117

அழகுபடுத்தும் சொற்றொடர் இவ்வாறதும்; வேற்றுமை
சந்தேக, கலக்கமயம்! இவ்வாறதும் ஆகும் என்பது
இவ் வேளையின்! ஸ்வய அனுபவமாகும். ஆனால்?
மற்றைய நூல்களிற் குறை கூற வில்லை. அப்படி
தோன்றினால், இவ் வேளையை மன்னிக்கும்படி,
உங்கள் அனைவரின் பாதங்களிலும் சாஷ்டாங்
கமாக விழுந்து, உங்கள் பாதங்களைப் பற்றி,
பலகோடி முறை மன்னிப்பு கோருகிறேம்.
காரணம்? இவ்வேளையின் நிலை அப்படி.

# குருடனுக்கு ஒரே மதி!

என்பது போலும்!

ஒன்றைப் பற்றி ஒரு கத்திரு! என்ற
ஆதி ஸ்ரீமான்கள் வாக்கின் அனுபவத்தாலும்,
அந்த **ஒரு** நூலையே **யுகயுகயுகயுக**மாக பெற்ற
ஸ்வய அனுபவத்தாலும். இதை இப்படி ஏதோ நேர்ந்து
ஆகவே திரும்ப திரும்ப மன்னிப்பு கோருகிறேம். தத



(118)

பக்தி நிலையில்
ஓர் நாம ரூபம்!
உள்ள ஸ்ரீமத் பகவானிடம்!
சர்வார்ப்பணம் என்ற
நிலையில், ஒருவன் பக்தி
அன்பு! கனிவு! பணிவு!
பொறுமை! இறைநம்பிக்கை!
யுடன் உலகில், ஒழுக்கத்துடன் வாழ்ந்தால்,
இறைகுமாரர் கண்ணில் பெற்று ஆத்மாகதை திகழ்வான்.

(3)

கேள்வி:— மற்றும் அனைத்து வேதாந்த நூல்களும்!
ஸ்ரீமத் பகவத்கீதையை தவிர ஜீவன் முக்தியை!
கொடுக்குமோ? அல்லது அவை அனைத்தும்
வாய் ஞானம் தானோ?

பதில்:— அபச்சாரம்! அபச்சாரம்!! அவ்விதம்
கூறலாகாது. அனைத்து வேதாந்த நூல்களும்!
அவசியம் ஜீவன் முக்தியை கொடுக்கும்.
இது சத்தியம்! இது சத்தியம்!! இது சத்தியம்!!!

அவை? பேர்! படிப்பு! பட்டம்! புகழ்!
↑ நம்பி
வேர் இவைகள் புகழ் போதித்தல்! என மட்டும் இருந்தால்

அது வாய் ஞானமே! அது அனுபவ ஞானம் அல்ல!
மேலே சொன்ன நிலையில், ஜீவன் முக்தி இல்லை.
அவைகள் சாதித்தால், ,, ,, உண்டு.

போதித்தல் மட்டும் இருந்தால் உனக்கும்! அவனுக்கும்! பிரயோஜனம் இல்லை.



ஆத்ம ப்ரம்மஹான்கள்! (119)
என்ன சொல்லி
ருர்கள் என்றுவீ?
படிப்பதால் மேல் நோக்கி
போகாதே! கல்வி
கற்பதால் உள் ஆத்மீ
தெய்வ அனுபவம் பெறுவாய்.
போகாதே! சாந்தியுடையவராக! உன் சாதக
யின் வைத்ரோஸன் (உன் ஆத்ம சக்தி)

(4) கேள்வி:- இந்த ஸ்ரீபுஸ்தகத்தை! உம் போன்று,
எவரேனும், பொறுத்தி எடுத்து, எழுதி, நித்திய
பாராயண(மும் உபதேசமும்) செய்கிறார்களா?

பதில்:- **ஸத்தியம் யாம்!** சுகல்கிறேம்.

**அறிவு** | நிலையில்! இவ்வுலகில், அனைத்து மனித
ஜீவர்களிடமும் (மனம் படைத்தோர் அனைவரிடமும்)
அந்தர்யாமியாய் (ஹிருதய வாஸியாய் மனச் சாட்சியாய்) உள்ளோம்.

**பேரறிவு** | நிலையில்! அனைத்து ஜீவராசிகளிடமும்
அனைத்து அண்டங்களிலும், சர்வ வியாபியாய்!
சர்வ சாட்சியாய்! அகண்ட பர பாவனையாய்!
நிறைந்திருக்கிறோம். இது ஸத்தியமே! அந்நிலையை
வைத்து, இக் கேள்விக்கு, பதில் அளிக்கும் நிலையில்?

(1) இந்த ஸ்ரீபுஸ்தகத்தை பொறுத்தி எடுத்து நித்திய
பாராயணம் செய்பவர்கள், இவ்வுலகில் எங்கும்
இல்லை என்பதே ஸத்தியம்.
(ஆனாலும் உண்டு)




உனக்கு கவசமாக அமையும். உன் ஆத்மசக்தியே! அதை நம்புகிறவர்களை கரைசேர்க்குமே யல்லாது உன் மோகத்தின் வாய்ஞானமாக முடியும். அது அனுபவ ஞானமாக நிறைவுறுவதே சத்தியம்.

(120)

(2) இந்த ஸ்ரீமத் ரிபு கீதையின் 26 அத்யாயங்களையும்! சமஸ்கிருதம், மற்றும் உலக அனைத்து பாஷைகளிலும், சில இல்லங்களிலும்! சில ஆலயங்களிலும்! குகைகளிலும் சில சத்சங்கம், பாராயணம் செய்யும் குறிப்பிட்ட இடங்களிலும்! நித்யம்! பாராயணம் இல்லை (இரண்டொரு அத்யாயங்கள் உண்டு) சில சில குறிப்பிட்ட காலங்களில் பாராயணம் செய்கிறார்கள்.

உபதேசம்! என சொல்லும் போது, மற்றும் அனைத்து வேதாந்த நூல்களுக்கு பாடம்! படிப்பு! என்ற நிலையில், ஸ்ரீரிபு கீதையையும்! இணைத்து அதன் கருத்துக்களை உபதேசமும் செய்கிறார்கள். தனித்த நிலையில், உபதேசம் இல்லையென்பதே சத்தியம். ஆனால் சில இல்லங்களில், இந்த ரிபு கீதையை உள் அறிந்து உணர்ந்து தம்பதியாக ஜீவன் முக்தி பெறும் நிலைக்கு, தயார் நிலையில் உள்ளனர்.



(௨)

நம்பிக்கை இல்லாதவர் களும் **சிலர்**! உண்டு. நாம் மாளும்! ஸ்ரீ யாத்திரையை விட்டால் என்ன ஆகுமோ? நம் குடும்பம் என்ன ஆகும்? நம் மனைவி! கணவன்! மக்கள் ஆதரிப்பார் யார்? என்றெல்லாம் சந்தேக தவங்க துவக்க பயம் கொண்டோர் **சிலர்** உண்டு.

இத்தகைய புதியினர்களுக்கு, அவர்கள் ஆர்வ புண்ணியம்! தர்மமாக மாறிய நிதியையும், அவர்கள், உபாசனை சக்தி கருணையினையும், **முன்**! ஜன்ம, ஸ்ரீ ஸத்குருவின் பரிபூரண திருவையினையும், பெற்று வருகிறார்கள் என்பதை ஸத்திய பிரமாண, ஆணைத்துடன் தெரிவித்து கேள்வியை, நிறைவு செய்கிறேன்.

ஓர் குறிப்பு:— இன்றைய அந்தணர் குருமார்கள்! சொல்வதாவது:— தர்மமாவும்! புண்ணிய பாவமும்! அறிந்து நாமும் குருமார்களும்! மறைமுகமாய் தானே! அது இல்லாதது தானே? அதற்கு ஏன், முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? என கேட்கிறார்கள். இது **கலி** யுகம் என்பதையும்! போட்டி பொறாமையால் **வக்ர** குணங்கள்! பின்னப்படுவதையும், மறந்தும், தானும் அதில் பின்னிப்பட்டிருப்பதையும் மறந்து விட்டார்கள். இல்லை இல்லை மறைக்கப்பட்டுவிட்டான் கலி தேவன். அதன் காரணம் **வேறுபோன** மயக்கமாகும் என்பதை உணரவும். சர்வார்ப்பணம் ஸமர்ப்பணம் விநோத தொரு ராகம் செய்வதில்.



நிபுகீதையான் (22) பாராயணத்தில் இதைவிட என்ன **பலன்** பெறப் போகிறோம்? ஒன்றுமே இல்லை! ஒன்றுமே இல்லை என கூறிக் கொண்டே வந்தால், நாமே இவ்வாறு போய் விடுவோமே! என்ற பயம் பிறந்து கொண்டோர் **சிலர்** உண்டு.

(56) அடங்கியுள்ளது.

மேலே உள்ள ஐந்தாவது கேள்வி நிலையில், வேறு வெளிநாடுகளில், எங்கேனும், அவரவர் மொழிகளில், நித்திய பாராயணம்! செய்கிறார்களா?

பதில்:- முந்தைய கேள்வி பதிவிலேயே இதன் பதிலும் அடங்கி இருக்கிறது. இருப்பினும் ஓர் முக்கியம் முன்பு ஆறு முறை! ஓர் திடநானி தோன்றியதாக கதைபடித்தீர்களல்லவா? அந்நாடுகளில் (கிரீன் லாந்து! (ஒரே பனிமயம்) ஸ்விட்சர் லாந்து! (ஆல்ப்ஸ் மலை) பெல்ஜியம்! (ஓர் குகை) அமேசான் காடு! (தென் அமெரிக்கா) காங்கோ காடு! (ஆப்ரிகா) இன்றைய கனடாவின்! கிழக்கே உள்ள கரும் காடு) ஆகிய ஆறு இடங்களிலும் அந்த திடநானியால், (இறை குருகளினால்) உருவாக்கப்பட்ட ஸ்ரீமத்ஸாயு கீதை! ரத்தின சுருக்கமாக! நிலைக்கு ஒற்றையாக! இதே ஸ்வயநாதனுபவம்! என்னும் நாமமாலை இடம்! தாவம்! பாராயணம்! ஒற்றையாக வைத்து அந்த ஸ்ரீமஹாரத்ன அனுபவித்தார்களாம்? அங்கு மட்டும்! இவையத்து ஆன்மாக்கள்! ஆங்காங்கே குறிப்பிட்ட காலங்களில் நித்தியபாராயணம்! செய்வதாக ஸ்ரீமஹான்கள் வாயிலாக கேள்விப்பட்டுள்ளேன்.

(123)



இதில் கூறும்
சி வ ரு ம்!
நம்பிக்கை கொண்டால் அவஸ்யம்
ஜீவன் முக்தி உண்டு தெரிந்திடயம்.

விதி! விதி! மனம்!
இவற்றால் நிகழும்
துன்பம்! துயரம்!
கஷ்டம்! கவலை!
சோதனை! வேதனை!
இவைகளுக்கு பயந்து
இறை குரு! நம்பிக்கை!
இழந்தோரும் சிலர் உண்டு.

அது மிக மிக மிக மிக அவன்!

ஆணையால், அதிரகஸ்யமாக (பாராயணம்) பாதுகாக்கப் பட்டு வருவதாகவும், ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்வி. (ஊர் உலகிற்கு தெரியாமல், நடைபெறுவதால் இல்லையென்றும் சொல்லலாம்.)

மேலும் 44 அத்யாயம் கொண்ட, ரிபு கீதையும்! அந்நாட்டு பாஷைகளில், மொழி பெயர்க்கப் பட்டு இரண்டொரு அத்யாயங்களாக, மாதம் மும்முறை நான்கு முறையாக! சில இடங்களில் சிரத்தையாக பாராயணம் செய்கிறார்கள் (ஆறில் நித்திய பாராயணம் இல்லை.)

இப்படி பாராயணமும் & பாட அநுபவமும் பெற்று வருபவர்களில், $\frac{95}{100}$ ஜீவன் முக்திக்கு தகுதி உடையவர்களாக, இருக்கிறார்கள் என்பதையும். அன்பான் குடிலில்/ நடைபெறும் (அந்தந்த இடங்களையும்) பாராயணம் & அநுபவ பாடம்! இவைகளால் அன்பர்கள்! $\frac{98}{100}$ ஜீவன் முக்தியின் தகுதி பெற்று விட்டார்கள் என் ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறேன். (நூறுக்கு தொண்ணூற்றி எட்டு)



சிரத்தை! நம்பிக்கை!
வைராக்கியத்துடன்
உணர & குரு!
உணர்வோம். எல்லோரும்
நல்லவர்களே என்றும்;
எல்லோரும் நம்மவர்களே
என்றும். நடப்பது நலமே என்றும்;
சர்வார்ப்பணமாக இருப்பவரும் பலர் உண்டு.

இதில் ஸ்ரத்தை & நம்பிக்கை! உள்ளவர்களே! அ ட ங் கு வ ர்! என இக் கேள்வியை, நிறைவு செய்கிறேன்.

(7) கேள்வி:— இந்த ஸ்ரீமத் ரிபு கீதையான்! (சிவரகஸ்யத்தின்) கருத்தால், தாங்கள் உணர்ந்தது என்ன? எங்களுக்கு உணர்த்துவது என்ன?

(1) ஸ்ரீமத் ரிபு கீதையால், யாம் உணர்ந்தது:—
பதில்:— இதுவே ஆதி வேதாந்த நூலாக இருப்பதினாலும்; சிவரகஸ்யம்! என்ற பிரம்ம ரகஸ்யமாக, இருப்பதினாலும். இந்த ஒன்றே. அனைத்து வேதாந்த நூல்களிலும், முதன்மையாகவும்! முழு நிறைவாகவும் & அமைந்த தன்மையாலும். இந்த ஒன்றையே ராம ஸ்வரூபமாக (வடிவமாக) உணர்கிறோம். மற்றும் அனைத்து,



அறிவு என்பது தனித்த நிலையில், ஆத்மா ஆகும். மாயாவுடன் ஒன்றுவீ, ஸ்ரீபகவான் ஆகும். மனம் அதை மூடினால், மனிதன் ஆகும். அதே அறிவு என்பது அனைத்து ஜீவகோடிகளிடமும் நிறைந்து, சர்வ வியாபியாய் இருக்கும் போது, சர்வ சாட்சியாகிய அகண்டாகாரமாய் ஆகும்.

125

வேத வேதாந்த சாஸ்திரம் அனைத்தும் இதையும்

வேதாந்த / நூல்களியும் எம் அங்கங்களாகவும் / உணர்கிறேன்.

ஸ்ரீமத் பகவத் கீதையே எம் இருப்பு / ஆகும் எம் இயக்கம் / மற்றும் அனைத்து வேதாந்த நூல்களும் அதாவது எம் அங்கங்கள் ஆகும்.


இருப்பு: காலாதீத பரமமாகிய பிரம்மம் ஆகும்.

இயக்கம்: அதை இருக்கிறேன் என்றதை தனக்குத் தானே, வெளிக்காட்டிக்கொள்வதாகும். அது வேத / வேதாந்த / சாஸ்திரங்களாகும்.

(2) ஸ்ரீமத் பகவத்கீதையால், உங்களுக்கு உணர்த்துவது:

இந்த ஸ்ரீமத் பகவத்கீதை / ஒன்றே, எந்த சிரமமும் இல்லாமல், இறை கிருபையையும் ஸ்ரீபகவானின் கருணையையும் பரகருணையையும் / அதாவது ஓர் ஸத்குரு கிருபையையும் / முறையாக பெற்று,

மூன்றாவதில் ஷாந்தி மாரிக்கம் படியும். இரண்டாவது அர்வாந்தி அதற்கு நாசமாகியும் இவ்விரண்டும் இணைந்து சேர்வதால், மனோநாசம் அதனால் ஜீவன் முக்தியும் உண்டு.



(126)

அருப்பு என்றால்
தாம் தாமாத
தமக்கு அன்னியமில்லாத
தனித் தன்மை யாகும்.
இயக்கம் என்றால்?
அங்கங்கள் ஆகும்.
அங்கங்கள் இல்லாமல் அந்த
அங்கங்கள் காட்டவும் முடியாது.
ஒன்று தன்மை வெளிக் காட்டவும் முடியாது.
ஜக ஜீவ ஜீவ ஈஸ்வரர்கள் ஆகவும் முடியாது.

பரப்பிரம்ம சாக்ஷாத் காரம்! இயல்பாகவும்,
லக்ஷியமாகவும், பெறுகிறார்கள் என உணர்த்துகிறோம்.
இதை உணர்த்தும் பாடல் ஒன்று.

பாடல் 98.

சர்வமுமே பிரம்மமெனப் போதித்தாலும்,
சந்ததமும் சுருதிமுடிப் படிப்புற்றாலும்;
பரமசிவம் கருணையில்லா வெறும் மூடர்க்கு;
பவ காவ வாதனையால், மீண்டும், மீண்டும்;
துவைதம் தோன்றிக் கொண்டே இருக்கும். ஆகவே
இருமையென, இதயத்தில் தெரிவதன்றி;
யாவையுமே பிரம்மமெனத் தெரிவதில்லை.
அரியவனே! ஆதலால் முமூட்சு எல்லாம்.

# அகண்டபரம் சிவம் கருணை

அடைய வேண்டும் என முடிக்கிறார்.

குறிப்பு:- அகண்ட பரம் என்பது பிரம்மம் என்ற
பர கருணை ஆகும்.
சிவம் கருணை என்பது, பகவான் கருணையாகும்.
இதுவே நம்பிக்கையால், வைராக்கியம் கொண்ட
மெய் அன்பர்களுக்கு உணர்த்துவதாகும்.



திவ்யமாகிய ஸ்ரீமத் கீதையும்! (127)
உருவாகிய
வேத வேதாந்தங்களும்
துலங்கவும்! இலங்கவும்
ஒளிரு உள்ளது என வெளிக்
காட்டித் தோன்றும், நிச்சயமாக ஓர் குரு
தேவைப்படுகிறது. அக்குருவினை, இயக்க

(8)

கேள்வி:- ஸ்வய ஞானானுபவ நூலின் 64-வது பாடல்
சுட்டிக்காட்டி கேட்கும் கேள்வியாவது:-
அப்பாடல்களின் நுட்பமான கருத்துக்களை
எடுத்துக் கூறி, கேட்கும் கேள்வி:- ஸ்ரீ கீதையின்

(A) நித்திய பாராயணம் தேவையா?

(B) அது சம்பந்த அத்வைத பாடங்களும் தேவையா?

பதில்:- இது மிக மிக மிக மிக முக்கியமானதொரு கேள்வி?

(A) கேள்வி:- ஸ்ரீமத் கீதையின் நித்திய பாராயணம் தேவையா

அவஸ்யம் தேவைதான்!

பதில்:-
காரணம்?

இது கலி | யுகமாக இருப்பதினாலும்; இக்கலியின்
கடைசி காலமாகிய தோஷ குணங்களின், ஆர்ப்
பாட்டம், அதி உக்ரமாக தாண்டவம் ஆடுவதனாலும்,
இக்கலியின் நாஸ்திகம்! அதிவேகமாக
பரவி வருவதனாலும்; மேல் நாட்டு நாகரீகமாகிய,



ஒருவனும் (128) தேவைப்படுகிறது. அக்கருவியே மாயா. அந்த ஒருவனை அகன் அம்ஸமாகிய ஸ்ரீபகவான் ஆவர். என்று ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம்.

அஞ்ஞானமாகிய விஞ்ஞானம் அதி வேகமாக பரவி வருவதனாலும் மனித ஒழுக்கம் வேகமாக கெட்டு வருவதினாலும், எ ல் லா மே அழிவை நோக்கி வேகமாக போவதனாலும் நித்திய பாராயணம் அவஸ்யம் தேவையாகிறது

(B) கேள்வி:- அது சம்பந்த அத்வைத பாடங்களும் தேவையா?

பதில்:- அவஸ்யம் தேவைதான். இதுவும்

காரணம்?

இன்றைய சாதகர்களுக்கு, பிர வ ர் த் தி யே வாழ்க்கையாக அமைந்து விட்டது. ஆகவே நி வ ர் த் தி மார்க்கத்திற்கு கடமை குறைவு. அதிசிரத்தையுடன் பாடம் கேட்டாலும் அப்பாடம் ஒருமணி நேரமே கேட்க முடிகிறது. அதற்கு மேல் உங்களால் நான் பாடம் கேட்கவும் முடியாது. உங்கள் ஒருவரால் சொல்லவும் முடியாது. காரணம்



தல் ஆகிய எம் (௨௯)
ஸ்ரீமத் கீதை!
இல்லாமல் உடல்
ஆகிய எம் வேத வேதாந்த
சாஸ்திரங்கள் இயங்காது
அதே உடல் இல்லாமல்
இதுதல் இருக்காது. அதாவது இருக்க இயலாது.
(இருந்தும் பிரயோஜனம் இல்லை)

# கலியின்! நெருக்கடி

அப்படி ஆகிவிட்டதும் அதாவது ??????????
சுமார் நூறு வருடங்களுக்குமுன், ஒ ழு க் க ம்!
தெய்வ ந ம் பி க் கை! இப்படித்தான்
வாழவேண்டும்! என்ற க ட் டு ப் பா டு!
பெரியவர்! சிறியவர்! என்ற ம தி ப் பு!
ம ரி யா தை! மனசாட்சிக்கு பயந்து
நடப்பது! பெண்களின் அ ணீ னி யா க ம்
பாவனை செய்த போர்வை நடப்பது! பாடம்படிப்பு
இல்லாமல் **அறிவின்! க....ல்....வி!**
அ ட க் க ம்! அமை(யில்)தி! ஆ ன ந் த ம்!
நிறைந்த ஆ ட ம் ப ர ம்! இல்லாமல் போ து ம் என்ற நிறைவும்
எல்லோரும் ந ல் ல வ ரே! என்ற உணர்வும்!
ந ம் ம வ ரே! ,, ,, !
நடப்பதெல்லாம் ந ன் மே! என்ற பேருணர்வும்
இருந்த



உ

வாதகமான & பாதகமான! நூல்களைத்தான் தார றி என்றே தவிர சாதகமான நூல் தாரணியச் சொல்லவில்லை. அப்படி சொல்லியிருந்தால் அதைத்தான் ஆராயலாம்.

(130)

இவைகள் பிரத்தியக்ஷம்! அனுபவ நிலையில் இருந்ததும் அதுவே ஒன்று! மேலே கூறியவை ஒன்றுமே இல்லை.

அதற்கு நேர்மாறாக நான்! ஒன்றும் இல்லாத அவ்வ நிலையாகும்.

ஆ..... க.....வே?

நித்திய பாராயணமும்! நித்திய உபதேசமும் தேவையே!


ஓர் முக்கியம் என்ன வென்றால்? பழைய பழமொழி

“ஏட்டுச் சுரைக்காய் சமையலுக்கு ஆகாது. அவ்வளவு புஸ்தகத்தில் வரைந்த சுரைக்காய் படமும்! என்று எழுதிய சுரைக்காய் எழுத்தும்! சமையல் செய்ய முடியாது” என்பது எம்மை வந்திய மொழி.

அதே நிலைதான் வேத வேதாந்த சாஸ்திர பாடம் படிப்பதும் ஆகும். அவைகள் சுருங்கக் கல்! பலன்

“கற்றபடி நில்!! வருவாய்”





வருந்தியுமே அவரவரும்
இடைவிடாமல்
புரியட்டுமே (31)
பூரணமாய்
நிதித்தியாசம்
செய்ய வேண்டுமென்று
சொல்வது தேவையா? நிதாகன் வைராக்கியத்
திடம், அஹம்பிரம்ம பாவனை செய்வோம் என்றான்
நிதாகன்.

பாடல் 59
இக்கவிதை சொல்லும் போதம்?

(A) பொருந்தி செய்! அப்படி செய்வதை,

(B) வருந்தி செய்!! அப்படி செய்து முடிந்த பின்,

(C) விரிந்து செய்!!! என்பதே ஸ்வயஞானானுபவம் ஆகும்.

விளக்கம்

(A) பொருந்தி செய்:— நாமரூப உறவு சுற்றம் நட்புகள் பாசம்/ கொண்டு காணுதே. ,, ,, ,, அன்பாக/ உணர்ந்து, ஸ்ரீபகவானை பொருந்தி உணர்வாயாக.

பணம்/ பதார்த்தம்/ பாண்டம் (அனைத்து நாமரூப பொருள்களும்) விண்/ பதத்தால் வரும்/ போகும்/ என பொருந்துவாயாக.

அவையெல்லாம் மண்ணே/ அம்மண் பரமே/ என உணர்ந்து பொருந்து/ ஆசை, தேவைகள் குறைப்பாயாக.

இவைகள் உன் ஆழ்மனதில், ஆசையாக, ஆழப்பதிந்து போன தன்மையால்.

(B) வருந்தி செய்:— இவைகள் மனம் வருந்தி செய்ய வேண்டும். அதாவது ஸ்ரீபகவானிடம் இறைஞ்சு உரைப்போம்.

132



வருந்தி! வருந்தி!
மனம்
கசிந்து! கசிந்து!
மனம்
உருகி! உருகி
மனம் பாசம் பசைகள்
உலர்ந்து எரியும் மதிருவம்
பெறும் பின் பிரம்மானந்த மையம் என்ற நாமக்
கனியால் மனம் சாம்பலாகும் (மனம் மறைந்தாலே)

சொந்த பந்த உறவும்!
போக்கும்! வரவும்!
கொடுக்கல்! வாங்கலும்! **போதும் ஐயனே போதும்**

பொன் பொருள் பூஷணமும்
உண்டதும், உடுத்தியதும்
பார்த்ததும் அனுபவித்ததும் **போதும் ஐயனே போதும்**

என்று **வ.....ரு.....ந்.....தி!**

அழுது உருகி முறையிட்டு! மேலும்?
நீ வேண்டும்! நீ யாக! யாம்!
ஆக வேண்டும்! பின் நீயும்! யாமும்!
அதுவே! என உணர வேண்டும்! இந்த
வரம் தந்தருள வேண்டும்! என **வருந்த!**
வேண்டும் வருந்தி வருந்தி அழ வேண்டும்



பொருந்தியும்! வருந்தியும்!
உள்ளம் உருகி;

(139)

சாதனை! செய்த நால் உன் மனம்
அறிவாகி, பரிபூரணம் ஆகி
ஆகும் போது அவ்வறிவே பேரறிவு ஆகிறது
என்பதை ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

வருந்துதல்
வாராதது
ஒன்றுமில்லை

ஓ விரிந்து செய் :- அவ்விரண்டிற்குமே உன்!
கடும்! முயற்சி வேண்டும். பின் இவ்வொன்றிற்கு
,, ,, தே வை இ ல் லை.

இங்கு உன் அனுபவம், எப்படி ட வேண்டுமெனில்?

எல்லாம் மண்! ப து மை க ளே!
,, ,, பொ ரு ள் க ளே!!

மண்ணுக்கு அயலாக ஏதுவும் இல்லை.
பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே!
பரமாகிய யாமே! யாமாகிய பரமே!!

அதுவே யாம்! யாமே அது!!

என பரிபூரண நிறைவு ஆவாயாக. இதுவே
பொருந்தி செய்வதும்! அம் பொருத்தத்தை மனம்!
வருந்தி செய்வதும்! இதை மனம் மறத்தலாகி அதுவே
அறிவானால்! நீயில் விரிந்து செய்து. அதுவே
சதா ஆனந்தம் இயல்பாக பெறும் நியமனம்.




# ஞானக்கதை

அடிப்பணியாத (134)
கொண்டதே
ஜீவ கர்த்தத்துவம் ஆகும்
ஸ்வயம் பிரகாசமான
ஆன்மாவை! மேலே கூறிய இரண்டிலும்

ஸ்ரீ ஸ்ரீமஹர்ஷி! சென்ற முறை நடந்த,
கங்கோத்ரி ஸத்ஸங்கம்! கேதாரம் ஸத்ஸங்கம்!
பத்ரிநாத் ஸத்ஸங்கம்! ஆகிய மூன்றிலும்!
தத்துவ விளக்கம் பெற்றோம். இம்முறை,
பத்ரியில்! தனிமையில், அவர் குகைக்கு அழைத்
துச் சென்றார். அங்கு அவர் ஓர் கேள்வியையே
மூன்று விதமாக கேட்டார்! அக்கேள்வியாவது?
(A) எல்லாம் நீயே! (B) எல்லாம் ஒன்றே!
(C) எல்லாம் நீயே குருதேவா! என்ற மூன்று
வாசகத்தையும் சொல்லி, இம்மூன்றிற்கும்!
தனித்தனியே, விளக்கம் வேண்டும்! என்றும்,
இது எதை, அடிபணியாத கொண்டது என்றும்,
இரண்டு கேள்விகள் கேட்டார்.

ஸ்ரீ வைத்தியத்தின் பதில்:- ஸ்ரீ அன்பான மஹர்ஷி!
இம்மூன்று கேள்விகளையும் எதை அடிபணியாத
கொண்டு, கேட்கிறீர்கள்? நாங்கள் நிச்சயிக்கத்தான்
இக்கேள்வியா? அல்லது, மற்றும் அன்பர்கள்
நிச்சயமாகவும், இதை கேட்கிறீர்களா?




ஸ்ரீமஹாத்மா :- ஓம் எளிமையான யாமாஜீ! நாங்கள் கூறும், இருநிலைகளும் உண்டு. எந்நிலைத்தமாகவும் / மெய் அன்பர்கள் நிலைத்தமாகவும் / இக்கேள்வி கேட்கப்படுகிறது?

வைத்தியம் :- இதுசாமான்யமான கேள்வி அல்ல. உன் ஆழ்ந்த கேள்வியாகும்! ஆகவே இக்கேள்வி, உங்கள் அன்பர்க்கும் எப்படி தோன்றியதும் அதை கொஞ்சம் சொல்லவாமா?

ஸ்ரீமஹாத்மா :- ஓ சொல்லலாமே! இங்கு உள்ள அன்பரும் நாங்கள்மடவிகள் அனைத்தும்படிக்காதவர்கள் இல்லையென்றே சொல்லுவோம். அப்படிப்படியில் நாங்கள் உணர்ந்த! நாங்கள் அனைவரும் உணர்வது யாதெனில்? ஜீவன்தன்மை, ஜீவகர்த்தத்துவம் முழுமையாக அறிய வேண்டுமெனில், அவசியம் ஏகசகர்த்தத்துவம் மேலோங்க வேண்டுமென்பதாலே:




விட்டால் போதும் (136)
என்ற வார்த்தை
சொல்வது அதி சுலபம்.
விடுவதுதான கடினம்.
இங்கு நான் சர்வார்ப்பணம்
ஒன்றை விட முடியும்.

கண்ணால் காணத் காண முடியாத, ஸ்ரீபகவானை
அறிவால் உன்னை உணர்வதே சர்வார்ப்பணமும்
அதனால் மனதை விலக்கியாலே.

அந்நியமால், ஒவ்வொருடைய வீக்களிலும்

# சர்வார்ப்பணம் ஒன்று


முதலிடம் பெறுவதாக உணர்கிறோம்.
அச்சர்வார்ப்பணத்தில், மூலமந்திரமாக விளங்குவது, ஸர்வாம் நீயே! என அறிகிறோம்.
உணர்கிறோம். அனுபவத்தில் **நாம்!**
முயற்சியும்! பயிற்சியும்! செய்கிறோம்.
என்பது பிரமாண உண்மையாகும்.
(அபிமைக்கியம் இடைமறிக்குது)
ஐக்கியம்:- கருமுயற்சி எனச் சொல்
தீர்களோமையா ரக்மா? அவ்வளவு தேவையில்லையே. விட்டால் போதுமே! அது ஓடி விடுமே? என் இந்த சிரமம்?
ஸ்ரீமஹாரக்மாஜி எதை விடச் சொல்கிறீர்மாபாபா?
எப்படி விடச் சொல்கிறீர்மாபா?



எல்லாம் நீயே! என்றால்
இச்ஜீவனுக்கு (137)
இருப்பு ஏது?
உடைமை ஏது? இயக்கம்
ஏது? அப்படி இருந்திடும்
இருப்பதாகத் தோன்றினால்
அது உன் அறியாமையின்
அஹங்கார/மமகாரம் என அறிக.


வைத்தியம் :- எல்லாம் நீயே/ என்றால் இங்கு
எல்லோருடைய கதையும் (கர்மாவும்) முடிந்து
விடுமே என் மகாப்ரபோ? இது அத்தனை சிரமம்
இல்லையே மகாப்ரபோ? மனதை / ம
ஙகாலேயே / விட்டு விட வேண்டியது தானே.

பரிஹாரம் :- நீர் அக்கரை சேர்ந்து விட்டீர்.
உம் கதை (வினை) முடிந்து விட்டது. ஆனால் நாங்
கள் அனைவரும் தாங்கள் மெய்யன்பர்கள்!
அனைவரும்/ நாய் / படாதபாடு படுகிறோம்
பாமரர். உம் பார்வை இங்கு இல்லை. அது மேல் நோக்கி
இருக்கிறது. ஆகவே எங்கள் (மனது) அவஸ்யம் தாங்கள்
தாளமுடியாதது தான். ஆனாலும் உங்கள் அறிவின்
உணர்வு (இறை கருணையால்) எங்கள் நோக்கங்களால்
நாங்கள் அனைவரும் நம்பிக்கையாக இருக்கின்றோம் தான்
பாமரர்!



ஓர் ரகஸ்யம் (138)
என்னவென்றால்
ஓர் தோற்றத்தின்
காரணம் மாயா ஆகும்
அதன் காரியம் மனம்
ஆகும் என உணரவேண்டும்
அப்படியானால் காரணம்
இல்லாமல் காரியம் இல்லை.
நாமம் என்றால் ஓசையே / ரூபம் என்றால் ஓர்
தோற்றம் ஆகும். ஓசை இல்லாமல் தோற்றம் வராது.
என்பதே சத்தியம்.

ஸ்ரீமஹாத்மா :- மனதை மனதால் விடு / என்றால்
அதன் உண்மையான், ரகஸ்யம் என்னமாமா?
வைத்தியம் :- மனம் என்றால் என்ன மஹாத்மா?
ஸ்ரீமஹாத்மா :- மனம் என்றால் எண்ணம். எண்ணமே
மனம் / பாபாஜி!
வைத்தியம் :- அம்மன எண்ணம் எதைப்பற்றி
நிற்கும் மஹாத்மா?
ஸ்ரீமஹாத்மா :- அம்மன எண்ணம் நாமரூபத்தை /
மட்டும் பற்றி நிற்கும் பாபாஜி / அந்த
நாமரூபம் / இல்லை என்றால், மனமும் இல்லை.
மன எண்ணமும் இல்லை பாபாஜி /
வைத்தியம் :- அந்த நாமரூபம் / எப்படி உண்டானது?
எப்படி இயங்குகிறது மஹாத்மா?
ஸ்ரீமஹாத்மா :- அந்த நாமரூபம் / மாயாவால்
உண்டான ஓர் தோற்றத்தை / மனதால் நாமரூபம்
கொடுத்ததால் உண்டாகிறது பாபாஜி!



ஓசையை உண்டாக்கியது
மாயா! (139)
ஆகும். அவ்
வோசையின் தோற்றத்
திற்கு நாமமும் ரூபமும்
கொடுத்தது மனம் ஆகும்.
எனை உணரவேண்டும். அந்தத் தோற்றத்தில்
இருப்பு ஒன்றுதான் உண்டு. பிரிந்த நாமரூபத்தை

வைத்தியம்:- அப்படியானால், மாயாவும் மனமும்! இணைந்தது தானே நாமரூபம்?

பரமாத்மா:- ஆமாம் பாபா. மாயாவும்! மனமும்! இணைந்ததே நாமரூபம்.


வைத்தியம்:- மாயாவின் மகன்தானே மனம்?

பரமாத்மா:- ஆமாம் மாயாவின் மகனே மனம்.

வைத்தியம்:- அப்படியானால், நாமரூபத்தை! உண்டாக்கிய மனதை! அத்தோற்றத்திற்கு காரணமான, மாயாவிடம் மனதை! விட்டு விட்டால், நாமரூபம் செயலற்று போகுமல்லவா?

பரமாத்மா:- (சற்று ஆழ்ந்து சிந்திக்கிறார்) ஆமாம் பாபா! மாயாவிடம் மனதை விட்டு விட்டால், நாமரூபம் தானே மறையும் பாபா.

வைத்தியம்:- மாயாவுக்கு இருப்பு உண்டா மஹாத்மா?




ஸ்ரீமஹாத்மா:- மாயா ஓர் நிழலே. அது இருப்பு இல்லாததே. ஆனால் ஓர் தோற்ற இருப்பை காட்டும் சக்தியுடையதாகும். என்பது ஸ்ரீமஹான்களின் வாக்காகும்.

வைத்தியம்:- அப்படியானால், அம்மாயா! எப்படி! எதனால்? இயங்குகிறது மஹாத்மா?

ஸ்ரீமஹாத்மா:- சூட்சும நாம ரூபமற்ற ஸ்ரீபகவானின்! பிடியால் அம்மாயா இருக்கிறது. அவனால் அம்மாயா இயங்குகிறது பாபா.

வைத்தியம்:- அப்படியானால், ஸ்ரீபகவான் உம் வசம் ஆனால், அம்மாயாவும்! அம்மனமும்! உம் வசம் ஆகிவிடுமா? ஆகிவிடாதா?

ஸ்ரீமஹாத்மா:- அவசியம் எம் வசம் ஆகிவிடும் பாபா! ஆனால் ஸ்ரீபகவான் எம் வசம் ஆகவேண்டுமே பாபா?



நாம ரூபங்களை
கண்டால்
ஸ்ரீபகவானை (4)
காணவும்! உணரவும்
முடியாது. ஸ்ரீபகவானின்
உள் இருப்பை
உணர்ந்தால் நாம ரூபம் சர்வ நாசமாகும்.

வைத்தியம் :- அப்படியானால் ஸ்ரீபகவான் வேறு! நாங்கள் வேறு தானா?


ஸ்ரீமஹராஜா :- (சற்று உள் ஆழ்ந்து இவ்விஷயங்கள் சிந்திக்கிறார்) ஸ்ரீபகவானை வேறு இல்லையாம் வேறு இல்லை என்றால் அதையும் ஏன் மனம்! நம்மை மறைக்கிறதே பாபா?

வைத்தியம் :- காரணம் என்ன மஹராஜா?

ஸ்ரீமஹராஜா :- நாமரூபமன்றோ காரணம் பாபா!

வைத்தியம் :- இந்த எல்லாம் நீயே! என, முழுமையாக உம் ஸ்ரீபகவானிடம் சரண் அடைந்தால், மாயாவும் மறையும்! மனமும் இல்லாதொழியும்! நாம ரூபமும் நாசமாகுமல்லவா?

ஸ்ரீமஹராஜா :- அன்பான பாபாவே! இது சத்தியமே! எல்லாம் நீயே! யில் இந்த மஹாதத்துவம் இருக்கிறதே! இதை சற்று விளக்குங்கள் பார்ப்போம்?



நாமரூப மயக்கம்
இருக்கும் வரை. (142)
ஸ்ரீ பகவான்
காட்சியும்! உண்மையின்
உணர்வும் கிட்டவும்
இருக்க இயலாது. ஒன்றி
ஒன்றைத்தான் காணமுடியும். ஒன்று தோற்
றினால் ஒன்று மறைந்தே ஆகவேண்டும்.

# (A) எல்லாம் நீயே!!!!!

எல்லாம் நீயே! என்றால் ஓர் நாமரூபமுள்ள! ஸ்ரீ பகவானிடம்! விடுவதாகும். குருவிடம் விடுவதல்ல. காரணம்:– நாமரூப ஜகஜீவ தோற்றங்களுக்கு, ஸ்ரீ பகவானே காரண கர்த்தாவாகும். ஆனால், ஸ்ரீ ஸத்குருவோ! நாமரூப, ஜகஜீவ, ஈஸ்வராதிகள் எல்லாம்

**நாமரூபத்துடன்!** இல்லையென்றும்
**அந்த ஒன்றாக!** இருக்கிறார் என்றும்
**ஜீவ ஈச!** கர்த்தத்துவம் இல்லையென்றும்

ஸத்திய பிரமாணமாக உரைப்பவரே ஸத்குருவாகும்! இருப்பதால், அவர் காரணம் ஆகமாட்டார். எல்லாம் நீயே! எனச் சொல்லும் நிலையில்.

147




ஸ்ரீபகவான் உன்னுள் நீயாகவே இருக்கிறான். எல்லாம் அவன் உடைமையாகவும்; அவன் இயக்கம் ஆகவுமே இருக்கிறது இது ஸத்தியமே. ஆனால் உன் கள்ள மனம் நம்ப மறுக்கிறது. உன்னுடைய மனம் (அறிவு) அவனையும் நம்பியே இருக்கும்.

அவன் ஓர் பக்தனே! அவன் சாமான்யன் அல்ல என உணர வேண்டும்.

எல்லாம் நீயே என்றால் :- ஜீவ இருப்பும்! ஜீவ உடைமை & உரிமையும்! ஜீவ இயக்கமும்! சர்வநாசம் ஆகிவிடும். என்பது ஸத்தியமே.

எல்லாம் நீயே என்பதில் :- எல்லாம் ஒன்றே எல்லாம் உனதே! என்பது அடங்கிவிடுகிறது.


ஓர் ஜீவன் நான்! நான்! எனமார்தட்டிக் கொள்வதால், இவனுடைய (மனதின்) தனித்தன்மையால் புண்ணியபாப கர்மாவை, அனுபவித்தாலே ஏற்றுக் கொள்கிறான், என்று உணர வேண்டும். அதே ஜீவன் நாம்! நாம்! என ஸ்ரீபகவானையும், இணைத்துக் கொள்வதால், அப்புண்ணியபாப பங்கில், அதன் கர்த்தாவாகிய, ஸ்ரீபகவானே! ஏற்றுக் கொள்கிறான் என அறிக.



மறை அறியாமையின்
ஜீவ கர்த்தத்துவம் (மம)
நாமரூப இருப்பு
உடைமை & உரிமை! இயக்கம்
ஒன்றே ஜீவன் நான்
என முன் நிற்கிறதேயன்றி
உண்மையில் ஜீவன் இல்லவே இல்லை.
மனமே ஜீவன்! ஜீவனே மனம்! என உணர்க

எல்லாம் நீயே! என்ற நிலையில் சந்தேக கலக்க
பயமின்றி! ஸ்ரீபகவானுக்கு அர்ப்பணித்து விட்டால்
உடைமையோ! உரிமையோ! இருப்போ! இயக்கமோ!
ஒன்றுமே! இல்லாத தன்மையால்.
அவனே (ஸ்ரீபகவானே) நாம் ஆகவும்! நாமே
அவன் ஆகவும்! ஆகும் நிலை இயல்பாகவே,
வேறு எந்த பயிற்சியும்! முயற்சியும்!
இல்லாமல் நாம் நாமாகவே!
தனித்த நிலை உண்டாகும் என்பது சத்தியமே!

(3) எல்லாம் ஒன்றே!:— இது
ஸ்ரீ ஸத்குரு அருளும் அனுபவநிலையாகும். இங்கு
ஈசகர்த்தத்துவமே! முழுமையாக நாசமான நிலையும்
இங்கு மந்த ஜீவனும் இல்லை. மாயா ஈசனும் இல்லை.



# நாமரூபம்!

தோற்றும் வரை (145)
மனமும் உண்டு.
ஜீவமயக்கமும் உண்டு.
ஜீவன் என்ற நாமமும் உண்டு

நாமரூபம் இயல்பாகவே மறைந்து எல்லாம்
மண்மயமாகி விட்டால் அதுவே ஜீவன் அல்ல
அதுவே ஜீவன் முக்தி ஆகும்.

நாமே அந்த ஒன்றாகவே இருக்கிறோம் என்றும்,
அந்த ஒன்றே நாமாக இருக்கிறோம்! என்றும்
நாமரூப, ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகள்! தோற்றம்
எதுவும் இல்லையென்றும்; பரிபூரண நிலையை
பெற்றுவிடுவோம். இந்நிலையடைய போது,
மண்! பதுமைகளாக (நாமரூபமாக) தோற்றிய
அனைத்தும் மண்! மயமாகிவிடும். அதாவது
தாவராதீதபரம் என, நாம் ஆகிவிடுவோம்.
இதனால் கோடானுகோடி கோள்களும்! பூமிகளும்!
சூர்ய சந்திராதிகளும்! அனைத்து ஜீவசரீரங்களும்!
அனைத்து ஜட பொருட்களும்! தோற்றமும், அதன்
இருப்பையும், மற்றும் உடைய (நாமரூப மயக்கம்
அற்ற நிலையில்) மண்ணாகிய பரமே! பரமாகிய
மண்ணே! பரமாகிய நாமே! நாமாகிய பரமே!
என்ற, கேவல கைவல்ய நிலையை! பெற்றுவிடுவோம்.



எல்லாம் நீயே (146)
குருதேவா
என்றும் எல்லாமே
குருதேவா!
என்றும் ஒன்றே என
அறிக. தேவா! என்பது
அடைமொழியாகும்
குரு என்பது ஒலியும்! ஒளியும்! ஆகும் என அறிக.

# எல்லாம் நீயே குருதேவா:—

இது பரிபூரண நிறைவான, முடிந்த முடிவாகும்.

**கு** என்றால் **ஒலி** ஆகும். **ரு** என்றால் **ஒளி!** ஆகும்


அதாவது, பிரணவ சப்தார்த்தத்தை! தொகுத்து, பிரம்மத்தின் இருப்பை (அகண்டப் பேரொளியை) உணர்த்தும் நிலையாகும்.

தேவா! என்பது அந்த ஒன்றுக்கு இருப்புத் தன்மையை தொடுக்கும் ஓர் உபசார வசனம் ஆகும்.

எ ல் லா ம் நீ (யே) கு ரு தே வா!

இதன் உண்மையின் உணர்வை பேரறிவு மயமானவர்களே உணர முடியும். அறிவு நிலைக்கும் எட்டாத ஒன்றாகும். ஓர் உண்மை என்னவென்றால் எல்லாம் நீயே குருதேவா! என்றே, "எல்லாமே குருதேவா!! "

சொல்லும் ஸத்தியமான வாசகமானது



ஒன்றில் ஒன்று (147)

எ ன

இ ரு மை!

தோன்றும் வரை அது
துவைதமே. அங்குமனம்
உண்டு. ஒன்றே ஸத்தியம்
ஒன்றுக்கு அயலாக எதுவும்
இல்லை என்ற உணர்வு பெறுவது விஷிஷ்டத்வைதம்
அங்கு அறிவு உண்டு.

**ஸாமான்ய!** குருதேவருக்கு பொருந்தாது
என்பது, ஆதி ஸ்ரீமஹான்களின் அனுபவ வாக்காகும்.
காரணம் யாது எனில்: — ஸாமான்ய குருவின் நிலை

(1) ஸாஸ்திரம்! வேதத்திற்கு உரிய நிலையில், போதனை செய்பவராகும். அவ்விதமே, முறையே ஜீவ ஒழுக்கமும் & தெய்வ நம்பிக்கை! உபாஸனை! இவைகளை மந்திரியங்களாகும். இவை ஆ ர ம் ப படிக்கட்டுகளாகும். மேல்படி சென்றவர்களுக்கு இது தேவை இல்லை

(2) நாமரூப, ஜக ஜீவ நிலை, பண்ணைப் பணியும் நிலையாகும்.

(3) **புத!** முக்திக்கு வழிகாட்டிகளாகும்.

(4) பாடம்/படிப்பு/பட்டம்/பதவி/அந்தஸ்து/கௌரவம்/என்ற நிலையில் **விக்ரஹம்!** நிறைந்த ஒன்றாகும்.

(5) மந்திர சக்தி! மஹத்தான ஸித்திகள்! யாகம்! பூஜை! முதலிய (4ம்) பிரவர்த்திக்குரியதாகும்.



ௐ

அந்த ஒன்றே நாமம்! நாமே அது! (148)

என்ற பேருணர்வை பெற்றுவிட்டால் அதுவே பேரறிவாகும் இதுவே

**அத்வைதம்**! ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

இன்னும், நிறைய சொல்லலாம். இவர்

**அத்வைதகுரு ஆவார்**! என, இதை நிறைவு செய்கிறேன்.

எல்லாம் நீயே குருதேவா! எல்லாமே குருதேவா!

என்பது **ஒலி & ஒளி**! இரண்டற கலந்த **பர**! அம்சம் கொண்டதாகும்.

இங்கு எந்த, நாமரூப, ஜகஜீவ, ஈஸ்வராதிகள் என்ற, எந்த கலப்பும் இல்லாத, **மௌனமய**! அகண்டப் பேரொளியின், அம்சம் உடையதாமே! முடிந்த முடிவாக கூறுவதாவது?

**நாமரூப**! ஜகஜீவ, தோற்ற **மோஹம்** கலந்த
,, ,, ஈஸ்வராதிகளின் **பயமும்**!

முழுமையாக, அழிந்து நாசமான நிலையே! அதாவது,



இரண்டற கலந்து (149)
என்றால் பிரணவ
ஒ லி யு ம்
அதாவது?
மா யா வும்
பர சொரூப அம்ச
ஒ ளி யு ம்
இரண்டற கலந்த ஓர் தோற்றம் அதும் என
உரைத்து.

போஹ
வைாக்க! மோஹ மயக்கமும்
தெய்வீக! ஞுபவாவண்யம்! மஹிமைபிரபாவமும்!
தோற்ற பய பீதி! கலக்கமும்!
இவ்வாக தே ஸத்குருவின்! சொரூபமாகும்.

குறிப்பு:- சொரூபம் என ஓர் தோற்றத்தை! நோக்கினீர்களோ? அது எப்படி பொருந்தும் என கேட்கலாம்? ஸத்திய பிரமாணமாக சொல்கிறேன்.

(A) உன் நாம ரூப, தோற்றம்! தோற்றும் வரை உன் ஸத்குருவையும்! ஓர் தோற்றம் மாத்திரம் என வைத்துக் கொள். அப்போது தான், உன் கர்மமும் சாகும். நாம ரூபத்தையே நம்பித் திரிந்த மனதை! நாமரூபத் தால் தான், அழிக்க முடியும். அழிக்க வேண்டும்.



நாமரூபத்தைத் தான்!

இமணம்! (150)

உண்டு என நம்புமே யல்லாது, சூட்சுமத்தையும், அது சம்பந்த ஓசையையும் (வாசனையும்) அம்மணம் நம்பாது. ஆகவே உன் மணம் அறியும் வரை உன் ஸத்குருவுக்கு நாமரூபம் இருக்க ஆக வேண்டும்.

(B) உன் தோற்ற நாமரூபம்! மண்ணை உணரும்! வரை, ஸத்குருவும் ஓர் தோற்றமாகத் தோற்றும். உன் மெய் உணர்வு ஆறவே! உன் ஸத்குருவின்! தோற்றமும் தானே மறைந்துவிடும். அதற்கு பயிற்சி முயற்சி தேவையில்லை. உன் ஸத்குருவின்! தோற்றம் எப்படி அமையும் என்றால்?

லௌகிகமும் அவரே! தெய்வீகமும் அவரே!


ஆனால்?

நாமரூப இவ்விரண்டின் தோற்றமும்! இருப்பும்! அதன் இயக்கமும்! அவரும் அல்ல நீயும் அல்ல அவர்

பரப்பிரம்மானந்தமும்!

அகண்ட பேரானந்தமும்!

உன் ஸ்ரீஸத்குரு சொரூபமாகும். இணைந்த 2



உன் ஸத் குருவின்!
நாம ரூபம்! (ரு)
மறைவதற்கு
எல்லாம் நீயே குரு தேவா!
எல்லாமே குருதேவா!
என்பது வாய் ஞானமாக
இல்லாமல், அனுபவ ஞானமாக
மாறவேண்டும். அதாவது நாமரூபம் அழிக்கவும்
மனமே என்ற உணர்வை பெற வேண்டும்.


ஆகவே எல்லாம் நீயே குருதேவா! என்றும்;

எல்லாமே குருதேவா! என்றும்; சொல்லும்

வாக்கின் ஓசையானது, லௌகிகமும்/தெய்வீகமும்!

அற்ற அகண்ட பரப்பிரம்மா
ஸத் குருவின்!
ஆநந்த சுஜானுபூதியை!
தரிசிப்பதாகும் என இதை நிறைவு செய்கிறேன்.

ஓர் ஸ்ரீ மஹாத்மா ஓர் நுட்பமான கேள்வி கேட்டார்.
அக்கேள்வி யாது எனில்?
ஸ்ரீ மஹாத்மா:— ஓ என் அன்பும் அறிவும் நிறைந்த
பாபா! ஸ்வய ஞானுபவ நூலில் / நீங்களின்
அனுபவ பாடல்களில், ஸ்ரீ குருதேவரை வணங்கவும்
முடியவில்லை என்கிறேனே, இதுபற்றி இன்றைய
அன்பருக்கும் (ஸ்ரீமாவயா அன்பர்களுக்கு
சில கேள்விகள் எழுகின்றன. அதாவது?



அஹங்காரம்! அதிகாரம்!
ஆதிக்கம்! அபிமானம்!
போட்டி பொறாமை 52
இவைகள் இல்லாதிருந்தால்
கரடுமுரடான பாறைகள்
மேடான உள்ளம் ஆகும். அவைகளை
ஸ்ரீ நந்த சர்வார்ப்பணத்தால்
ஸ்ரீ பகவானின்

(1) ஸ்வய ஞானானுபவம் பெற்ற பின், அவன் தன்
ஸத்குருவை, எப்படி காண்கிறான்? அல்லது
எப்படி உணர்கிறான்?

(2) வணங்க முடியவில்லை யென்பதன் உள் அர்த்தம்
என்ன?

(3) அந்த நிதானத்தில் தன்னை ஆத்ம வஸ்துவை
எப்படி காண்கிறான்? எப்படி உணர்கிறான்?

(4) கைமாறு செய்ய முடியவில்லை! என்பதின்
பொருளென்ன?

(5) நீயும் இல்லை! யானும் இல்லை! என்றால், (அல்ல)
நாமரூபத்தை குறிக்கிறதா? உள்ளே உள்ள
சைதன்யத்தை குறிக்கிறதா? சைதன்யம்
என்றால் அதன் அருத்த விளக்கம் தேவை?
அன்பான பாபா! மேலே கூறிய ஐந்து கேள்
விகள்! அனைவர் உள்ளத்திலும் இருக்கிறது.
இவைகளுக்கு, தெளிவான விளக்கம்!
எளிமையும்! இனிமையும்! கலந்ததாக வேண்டுமென்று
பணிவாக, கேட்டுக் கொள்கிறேன்?




Abode of Love

You Are Everything!